**செய்தி வெளியீடு எண் :989** **நாள்:14.11.2008**

# கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் துறை

## பத்திரிக்கை செய்தி

## நெசவாளர் கூட்டுறவு சங்க பணியாளர்களுக்கு ரூ.500/— முதல் ரூ.2,500/— வரை ஊதிய உயர்வு

நெசவாளர் கூட்டுறவு சங்க பணியாளர்களின் ஊதிய விகிதங்கள் 1.7.1997 முதல் அமலாக்கப்பட்டு வந்தது. இந்த ஊதிய விகிதங்கள் 5 ஆண்டுகளுக்கு அதாவது 30.6.2002 வரை நடைமுறையில் இருக்கும் என அறிவிக்கப்பட்டது. அதற்குப்பிறகு ஊதியம் திருத்தியமைக்கப்படவில்லை. எனவே, நெசவாளர் கூட்டுறவு சங்க பணியாளர்களின் கோரிக்கையை ஏற்று நெசவாளர் கூட்டுறவு சங்க பணியாளர்களுக்கு புதியதாக ஊதியம் சீரமைக்க அரசால் ஊதியக் குழு அமைக்கப்பட்டது. ஊதியக் குழுவின் பரிந்துரைகளை அரசு பரிசீலித்து, புதிய ஊதிய விகிதங்களை 1.1.2008 முதல் முன்தேதியிட்டு அமல்படுத்த மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் ஆணைப்படி அரசாணை (நிலை) எண்.162, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் துறை, நாள் 13.11.2008—ல் ஆணையிடப்பட்டுள்ளது. இந்த புதிய ஊதிய விகிதங்களின்படி தற்போதுள்ள ஊதியத்தைவிட 27 விழுக்காடு வரை உயர்த்தி ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதனால் நெசவாளர் கூட்டுறவு சங்க பணியாளர்களுக்கு கூடுதலாக ரூ.500/— முதல் ரூ.2,500/—வரை நிதிப்பயன் கிடைக்கும். மேலும் வீட்டு வாடகைப்படி, பயணப்படி, கண்காட்சிப்படி மற்றும் விற்பனை ஊக்கத் தொகை ஆகியவையும் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

புதிய ஊதிய விகிதங்களை அமல்படுத்துவதன் மூலம் தமிழ்நாட்டிலுள்ள 1250 நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிலுள்ள சுமார் 3000 பணியாளர்கள் பயன் பெறுவார்கள். இதனால் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு ஆண்டொன்றுக்கு சுமார் ரூ.3.00 கோடி கூடுதல் செலவினம் ஏற்படும்.

கூடுதல் செயலர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9.**